## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.2.5.D

எண்ணியல் - பயிற்சி - தநாஅபு - பயிற்சி 1.5.7-9

## எண்ணியல் - பயிற்சி - தநாஅபு - பயிற்சி 1.5.7-9

7. காமாட்சி என்னும் பழ வணிகர், 30 ஆப்பிள்களையும், 50 மாதுளைகளையும் விற்கிறார். அவருக்கு, ஓர் ஆப்பிளால் ₹8 இலாபமும், ஒரு மாதுளையால் ₹5 நட்டமும் கிடைத்தது எனில், அவரது ஒட்டுமொத்த இலாப/நட்டத் தொகையினைக் காண்க.

விற்ற ஆப்பிள்களின் எண்ணிக்கை = 30

விற்ற மாதுளைகளின் எண்ணிக்கை = 50

ஒரு ஆப்பிளில் இலாபம் = ₹8

ஒரு மாதுளையில் நட்டம் = ₹5

ஒட்டுமொத்த இலாப/நட்டத் தொகை = $(30 \times 8) + (50 \times -5)$

= 240 - 250

= -10

$30 \times 8 = 240$

$50 \times 5 = 250$

கிடைத்திருக்கும் தொகை குறைமுழு ஆதலால் அது அவருக்கு நட்டமாகும்.

காமாட்சி ஆப்பிள் மற்றும் மாதுளை பழங்களை விற்றதன் மூலம் அவருக்கு ஒட்டுமொத்தமாக ₹10 நட்டம் ஏற்பட்டது.

8. ஒரு வறட்சிக் காலத்தில், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வாரத்திற்கு 3 அங்குலம் வீதம் குறைகிறது எனில், தொடர்ச்சியான ஆறு வார கால இறுதியில், நீர்மட்டத்தில் ஏற்படும் மாற்றத்தை அளவிடுக.

ஒரு வாரத்திற்கு குறையும் நீர்மட்டத்தின் அளவு } = 3 அங்குலம்


ஆறு வாரத்திற்கு பின்பு குறையும் நீர்மட்டத்தின் அளவு } = $6 \times 3$

= 18 அங்குலம் குறையும்

$6 \times 3 = 18$

எனவே, மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ச்சியான ஆறு வார கால இறுதியில் அதன் நீர்மட்டம் 18 அங்குலம் குறைந்திருக்கும்.

9. புத்தர் கி.மு. (பொ.ஆ.மு) 563 -இல் பிறந்து, கி.மு. (பொ.ஆ.மு) 483 இறந்தார். அவர் கி.மு. (பொ.ஆ.மு) 500 இல் உயிர் வாழ்ந்தாரா? அவருடைய ஆயுட்காலம் எவ்வளவு?




மேலே கொடுக்கப்பட்ட எண்கோட்டின் படி -563 மற்றும் -483 -க்கு இடையில் -500 அமைந்திருப்பதால் அவர் கி.மு.500 -ல் வாழ்ந்திருப்பார்.

புத்தர் பிறந்தது = கி.மு.563

புத்தர் இறந்தது = கி.மு.483

புத்தரின் ஆயுட்காலம் = -483 - (-563)

= -483 + 563 = 80 வருடங்கள்

புத்தர் கி.மு. (பொ.ஆ.மு) **500** -ல் உயிர் வாழ்ந்தார். மேலும் அவரது ஆயுட்காலம் **80** வருடங்கள் ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 1st June, 2022 :: 17:32 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.